## ஒன்றிய அரசின் சி.பி.சி.எல். நிறுவனத்தால் ஏற்பட்ட

# எண்ணூர் எண்ணெய் கசிவு பாதிப்புகளைத் தீர்க்க எடுத்த நடவடிக்கை என்ன?

## மக்களவையில் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, டிச.22-

**கடந்த ஆண்டு ஒன்றிய அரசின் CPCL நிறுவனத்தால் ஏற்பட்ட எண்ணூர் எண்ணெய் கசிவால் ஏற்பட்ட பாதிப்புகளை முழுமையாக தீர்த்து வைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? என மக்களவையில் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.**

சென்னையில் இயங்கிவரும் ஒன்றிய அரசின் சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேசன் லிமிடெட் (CPCL) நிறுவனத்திலிருந்து கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் எண்ணூர் பகுதியில் கச்சா எண்ணெய்க் கசிவு ஏற்பட்டு அப்பகுதியின் சுற்றுச்சூழலுக்கு மட்டுமின்றி, பறவைகள், மீன் இனங்களின் இனப்பெருக்கம் என பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டது.

மேலும் அந்தப் பகுதியில் உள்ள மீனவ கிராமங்களில் உள்ள மீன்பிடிப் படகுகள், மீன்பிடி வலைகள் என அனைத்திலும் கச்சா எண்ணெய் படிந்து அவர்களது வாழ்வாதாரமே பாதிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து சமீபத்தில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் CPCL நிறுவனத்துக்கு ரூ.73 கோடி ரூபாய் அபராதம் விதித்ததும் குறிப்பிடத் தக்கது.

இந்நிலையில் இதுகுறித்த பல்வேறு கேள்விகளை ஒன்றிய எரிசக்தித்துறை அமைச்சகத்திடம் மக்களவையில் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் வினவினார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு:



எண்ணூர் எண்ணெய்க் கசிவால், ஏற்பட்டுள்ள சுற்றுச்சூழல் பாதிப்பை ஆய்வு செய்து, இந்த பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில் சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனமும் (CPCL) ஒன்றிய அரசும் மேற்கொண்ட நடவடிக்கை என்ன எனக் கேள்வி எழுப்பினார்.

எண்ணெய்க் கசிவால் பாதிக்கப்பட்ட இடங்களை, குறிப்பாக சதுப்பு நில காடுகள் மற்றும் ஏரிப்பகுதிகளை அப்பாதிப்பிலிருந்து மீட்டு மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் (NGT) உத்தரவுப்படி, சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிட்டெட் (CPCL) நிறுவனம் பின்பற்றுகின்ற வழிகாட்டு நெறிமுறைகள் என்ன எனக் கேள்வி எழுப்பினார்.

இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் தடுக்கவும், ஒருவேளை நிகழ்ந்தால், அதனை திறம்பட கையாளவும், CPCL நிறுவனத்திடம் பேரிடர் மேலாண்மைத் திட்டங்கள் ஏதேனும் உள்ளதா என்றும், அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்.

எண்ணெய் கசிந்த இடங்களில் ஏற்பட்டுள்ள சுற்றுச்சூழல் பாதிப்பைச் சரிசெய்ய CPCL மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்த தகவல்களை அவ்வப்போது மாநில அரசுக்கும் பொதுமக்களுக்கும் வெளிப்படைத் தன்மையோடு அந்நிறுவனம் வழங்குகிறதா என்றும், அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் (TNPCB) மற்றும் தேசிய பசுமை தீர்ப்பாயம் (NGT) வழங்கிய அனைத்து உத்தரவுகளையும் CPCL முறையாக பின்பற்றுகிறதா என்றும் அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும், இல்லையெனில் அதை பின்பற்றுவதில் என்ன சிக்கல் என்று தெளிவாகக் குறிப்பிடவும் எனக் கேள்வி எழுப்பினார்.

இந்த எண்ணெய் கசிவினால் ஏற்பட்ட சமூக பொருளாதார சேதங்கள் குறித்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் அறிக்கையில்சுட்டக் காட்டப்பட்டவைகளை சரிசெய்ய CPCL ஏதேனும் திட்டங்கள் வைத்துள்ளதா? அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்.

## சென்னை விமான நிலைய

# போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அமைப்பால் கிடைக்கும் வருவாய் எவ்வளவு?

## மக்களவையில் டி.எம். கதிர்ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, டிச.22-

சென்னை விமான நிலைய விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அமைப்பு (ATS) சர்வதேச பயணிகள் மற்றும் சரக்கு விமானங்களுக்கு ஏடிஎஸ் சிக்னல் வழங்கியதன் மூலம் ஒன்றிய அரசுக்கு கிடைத்த வருவாய் குறித்து நாடாளுமன்ற மக்களவையில் மக்களவையில் வேலூர் தொகுதி எம்பி D.M.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

சென்னை விமான நிலையத்தில் உள்ள விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அமைப்பு (ATS), இந்த விமானப் பாதை வழியாகச் செல்லும் பல்வேறு சர்வதேச பயணிகள் மற்றும் சரக்கு விமானங்களுக்கு ஏடிஎஸ் சிக்னல் வழங்குகிறது



என்பது உண்மையா? அப்படியானால் அதன் விவரங்கள் என்ன?

சென்னை ஏடிஎஸ்ல் உள்ள சிக்னல் சேவையின் மூலம் அரசுக்கு நல்ல வருவாய் கிடைத்துள்ளதா? அது குறித்த விவரங்கள் என்ன?

நாட்டிலுள்ள மற்ற முக்கிய விமான நிலையங்களில் ATS ஐ நிறுவுவதற்கு ஒன்றிய அரசிடம் ஏதேனும் முன்மொழிவு உள்ளதா? அப்படியானால்> அதன் விவரங்கள் என்ன? என்று அவர் கேள்வி கேட்டறிந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் சிவில் விமான போக்குவரத்து அமைச்சகத்தின் இணை அமைச்சர் முரளிதர் மொஹோல் எழுத்துபூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:-

சென்னை விமான நிலையத்தின் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுப் பிரிவு, சென்னை விமானத் தகவல் மண்டலத்திற்குள் இயங்கும் அனைத்து விமானங்களுக்கும் விமானப் போக்குவரத்து சேவைகளை (ATS) வழங்குகிறது.

ஏர்போர்ட்ஸ் அத்தாரிட்டி ஆஃப் இந்தியா (AAI), ஒரே ஏர் நேவிகேஷன் சர்வீஸ் வழங்குனராக (ANSP), சென்னையில் வழங்கப்படும் நேவிகேஷனல் சேவைகளுக்கு 2023-24 நிதியாண்டில் ரூ.198.48 கோடிகள் ஈட்டியது.

AAI ஆனது அனைத்து விமான நிலையங்களிலும் விமான போக்குவரத்து சேவைகளை வழங்குகிறது. சிவில் என்கிளேவ்ஸ் தவிர ATS சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளால் வழங்கப்படுகிறது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

## கத்தார் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படும்

# இந்திய முட்டைகள் மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்த தூதுக்குழு அமைப்பீர்!

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச. 22 -

கத்தார் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படும் இந்திய முட்டைகளின் அளவு மீது விதித்துள்ள கட்டுப்பாடுகளை தளர்த்த தூதுக்குழு அமைக்க வேண்டும் என மாநிலங்களவையில் நாமக்கல் மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் வலியுறுத்தியுள்ளார்.

டெல்லியில் நாடாளுமன்ற கூட்டத்தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இக்கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு, கத்தார் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படும் இந்திய முட்டைகளின் அளவு மீது விதித்துள்ள கட்டுப்பாடுகளை தளர்த்தவும், இந்திய முட்டை



உற்பத்தியாளர்களுக்கு கத்தார் சந்தையை தொடர்ந்து அணுகுவதற்கும், பரஸ்பர தீர்வு காண கத்தார் அரசுடன் ராஜதந்திர விவாதங்களில் ஈடுபடுவதற்கு தூதுக்குழுவை அமைத்து, கத்தாருக்கு அனுப்ப ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்து உளளதா? என கலந்து கொண்டு அரசு கேள்வி எழுப்பி உள்ளார்.

இதற்கு பதில் அளித்து பேசிய வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் ஜிதின் பிரசாத், கத்தாரில் முட்டைகளை இறக்குமதி செய்வது தொடர்பான கத்தாரின் கொள்கையில் சமீபத்திய மாற்றங்கள் குறித்து அரசாங்கம் அறிந்திருக்கிறது.

கடந்த நவம்பர் 10, 2024 முதல் நடைமுறைக்கு வரும் தேவைகளைக் கோடிட்டுக் காட்டும் புதிய விதிமுறை களின் படி, லேபிளில் வகைப்படுத்தல் தரம் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும், கிரேடு “AA” ஒரு முட்டைக்கு 70 கிராம் எடை தேவை, கிரேடு ‘A’ ஒரு முட்டைக்கு 60 கிராம் தேவை, கிரேடு ஒரு முட்டைக்கு 50 கிராம் தேவைப்படும் ‘பி’ மற்றும் கிரேடு ‘சி’ ஒரு முட்டைக்கு 47.4 கிராமுக்கு குறைவாக வரையறுக்கப்படுகிறது. நேரடி நுகர்வோர் விற்பனைக்காக கிரேடு ‘பி’ மற்றும் ‘சி’ முட்டைகளை இறக்குமதி செய்வதை கத்தார் தடை செய்கிறது. இந்த மாற்றங்கள் இந்தியாவிற்கு மட்டும் அல்ல, அனைத்து நாடுகளுக்கும் பொருந்தும்.

கத்தாரில் உள்ள இந்திய தூதரகம் கத்தாரில் உள்ள இந்திய முட்டை இறக்குமதி நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்தியதுடன், வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) கத்தாரில் உள்ள இந்திய தூதரகத்திடம், இராஜதந்திர வழிகள் மூலம் கத்தார் அதிகாரிகளிடம் சிக்கலை எடுத்துச் சொன்னதற்காக பிரச்சி னையை எழுப்பியுள்ளது.

இந்தியாவில் இருந்து கிரேடு ‘பி’ முட்டைகளை தொடர்ந்து இறக்குமதி செய்ய அனுமதிக்குமாறும், கிரேடு ‘சி’ முட்டைகள் தொடர்பான கொள்கையை மறுபரிசீலனை செய்யுமாறும் கத்தார் அதிகாரிகளிடம் இந்திய தூதரகம் கோரிக்கை விடுத்துள்ளது. பொது சுகாதார அமைச்சகம் மற்றும் இந்திய ஏற்றுமதியாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக தர நிலைப்படுத்தல் மற்றும் வானிலை ஆய்வுக்கான கத்தார் பொது அமைப்பு நடவடிக்கை எடுத்து வருகிறது என்று கூறினார்.

# “ஒரே நாடு ஒரே தேர்தல்” என்ற ஒன்றிய அரசின் திட்டம் இந்திய ஒற்றுமையைச் சிதறடிக்கும்!

“ஒரே நாடு ஒரே தேர்தல்” என்ற பாரதிய ஜனதாக் கட்சியின் கொள்கைமுடிவை சட்டமாக்குவதற்கு, நாடாளுமன்றத்திலே சட்ட மசோதா தாக்கல் செய்ய பா.ஜ.க. ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்திய நாட்டின் இறையாண்மை மீதும், ஒற்றுமையின் மீதும், நம்பிக்கை வைத்துள்ள அரசியல் கட்சிகளுக்கு ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும் உருவாக்கியிருக்கிறது.

ஒன்றிய அமைச்சரவையின் இந்த முடிவு “நடைமுறைக்கு ஒவ்வாத, மக்களாட்சிக்கு எதிரான இந்த நடவடிக்கை மாநிலங்களின் குரலை அழித்துவிடும், கூட்டாட்சியியலை சிதைத்து விடும், அரசின் ஆட்சி நிர்வாகத்திற்கு தடையினை ஏற்படுத்தும்”. இந்திய ஜனநாயகத்தின் மீதான இந்த தாக்குதலை, “நம் ஆற்றல் அனைத்தையும் ஒன்று திரட்டி எதிர்ப்போம்” என தமிழ்நாட்டின் முதல்வர் அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள். நடைமுறை சாத்தியமில்லாத ஒரு கொள்கைமுடிவை ஒன்றிய அரசின் ஆட்சிக் கட்சியான பாரதிய ஜனதாக் கட்சி தன்னுடைய சுயநோக்கங்களையும், அபிலாசைகளையும் பூர்த்தி செய்து கொள்வதற்காக, மக்களால் வழங்கப்பட்ட அதிகாரத்தை தவறாக பயன்படுத்துவது, அதுவும் இந்திய அரசியல் சட்டத்தினுடைய நோக்கங்களுக்கு எதிராக பயன்படுத்த முயற்சிப்பது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல. இந்திய அரசியல் சட்டம் அனைத்து மக்களின் ஒப்புதலோடு, நிரந்தர ஒற்றுமைக்கான சில நோக்கங்களை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்ட சட்டம் என்பதை இந்திய அரசியல் சட்டத்தின் முகவரியில் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. (THE PEOPLE of India, having solemnly resolved to constitute India into a [SOVEREIGN SOCIALIST SECULAR DEMOCRATIC REPUBLIC] and to secure to all its citizens...) இந்த ஒற்றுமைக்கான அடிப்படை நோக்கங்களை சிதைக்கும் வண்ணம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ எடுக்கப்படும் எந்த நடவடிக்கைகளையும் இந்திய ஒன்றியப் பகுதிவாழ் இந்திய மக்களின் உணர்வுகளுக்கும், நோக்கங்களுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் எதிரானவை என்றுதான் கருத முடியும்.

சமீபத்தில் ஒன்றிய அமைச்சரவையின் ஒப்புதல் பெற்ற “ஒரே நாடு ஒரே தேர்தல்” திட்டம் சட்ட வடிவம் பெறுவதற்கு, நாடாளுமன்றத்திலே ஒப்புதல் பெற வேண்டுமென்பதோடு வேறுசில சட்ட நடை முறைகளையும் நிறைவு செய்ய வேண்டும். அமைச்சரவையின் ஒப்புதல் பெற்ற இந்தத் திட்டம் உள்நோக்கம் கொண்டதாகவே அனுமானிக்க முடிகிறது. ஒன்றிய பாரதிய ஜனதாக் கட்சியினுடைய நோக்கங்களும், செயல்திட்டங்களும் மாநில அதிகாரங்களை குறைத்து, ஒன்றியத்தில் அதிகாரங்களை மையப்படுத்துவதுதான் என்பது பாரதிய ஜனதாக் கட்சியின் கடந்தகால ஆட்சியின் அனுபவங்கள் மூலம் தெளிவாக அறிய முடிகிறது. மாநிலங்களின் அதிகாரங்களை குறைப்பதன் மூலம் “மாநில சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி” என்கின்ற அரசியல் தத்துவத்தை வலுவிழக்க செய்து, நாடாளுமன்ற ஆட்சிமுறையை மாற்றி, அமெரிக்காவைப் போன்று ஜனாதிபதி ஆட்சிமுறையை கொண்டு வருவதற்கான வெள்ளோட்டம்தான் “ஒரே நாடு ஒரே தேர்தல்” என்ற முழக்கமாகும்.

இந்த “ஒரே நாடு ஒரே தேர்தல்” முழக்கத்தின் அடுத்தக் கட்டம் “இந்துத்துவாக் கோட்பாடு”, இந்துராஷ்ரம்” என்பதாகத் தான் இருக்கும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. இதற்கான முன்னேற்பாடு களும், கட்டமைப்புகளும் திட்டமிட்டு பாரதிய ஜனதாக் கட்சியினுடைய அரசில் நடந்து கொண்டிருக்கிறது என்பது அரசியல் நோக்கர்களுக்கு நன்கு விளங்கும். இந்த “ஒரே நாடு ஒரே தேர்தல்” என்ற முழக்கம் இந்திய நாட்டின் ஒற்றுமையை வலுவிழக்கச் செய்யும். மேலும், சிறுபான்மை மக்களுக்கு அச்சத்தையும், பாதுகாப்பற்ற நிலையையும் உருவாக்கும். கன்னியாகுமரி தொடங்கி, காஷ்மீர் முடிய உள்ள இந்திய நிலப்பகுதியை துணைக் கண்டம் என்று தான் வரலாற்று ஆசிரியர்கள் சான்றுடன் உறுதிப்படுத்தி யுள்ளார்கள். இங்கு பல்வேறுபட்ட பண்பாடு, மொழி, இனம் ஆகிய அடிப்படைகளில் வேறுபட்ட மக்கள் வாழும் பன்முகத் தன்மை கொண்டதுதான் இந்தியத் துணைக் கண்டம், பன்முகத் தன்மை கொண்ட இந்த மக்களை ஒன்றுபடுத்தியது விடுதலைப் போராட்டங்கள். விடுதலைப் போராட்டங்களால் உருவான ஒற்றுமை உணர்வு, அந்நிய ஆங்கில ஆட்சியை அப்புறப்படுத்தியதோடு, நாட்டின் விடுதலைக்குப் பின்னரும் ஒன்றாக யிருக்க வேண்டுமென்று உறுதியெடுத்துக் கொண்ட மக்களின் ஒட்டுமொத்த உணர்வுகளின் வெளிப்பாடு தான் “இந்திய அரசியல் சட்டம்”. எனவே, இந்தியத் துணைக் கண்டத்து மக்களின் ஒற்றுமைக்கும், இறையாண்மைக்கும் இந்திய அரசியல் சட்டம்தான் அடிப்படை என்பதை ஒன்றிய அரசின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள பாரதிய ஜனதாக் கட்சி உணர்ந்து செயல்பட வேண்டும்.

இந்த கருத்தைத் தான் 14.12.2024 ஆம் தேதி இந்து ஆங்கில இதழில் கல்பனா கண்ணப்பிரான் தீட்டிய ஆங்கில கட்டுரையில் தெரிவித்துள்ளார். (The ‘We’ is a constitutionally constituted people. A non denominational, plural, dizzyingly heterogeneous, and diverse beyond measure people who believe in the spirit of the constitution and its core values.) இந்திய ஒன்றியத்தின் ஒற்றுமை குறித்து பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள் “வேற்றுமையில் ஒற்றுமை” என்றுதான் குறிப்பிட்டார்கள். இந்த ஒற்றுமையை தொடர்ந்து காப்பாற்றி உறுதிப்படுத்திக் கொண்டிருப்பது இந்திய அரசியல் சட்டம்தான் என்பதை தீர்க்கமாக ஒன்றிய ஆட்சியில் உள்ளவர்கள் உணர்ந்து கொண்டு செயல்பட வேண்டும். இல்லையெனில், இந்திய ஒற்றுமை என்பது கேள்விக்குறியாகிவிடும்.

**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை
செயல்திட்டக்குழு உறுப்பினர்



“ஒரே நாடு ஒரே தேர்தல்” என்பது நடைமுறை சாத்தியமான முழக்கமா என்பதை ஒன்றிய அரசு ஆழமாகப் பரிசீலனை செய்ய வேண்டும். ஜனநாயக ஆட்சிமுறையில் மக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கு தேர்தல் முறை என்பது கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றாகும். குறைந்த மக்கள்தொகைக்கு கொண்ட சிறிய நாடுகளில் வேண்டுமானால் “ஒரே நாடு ஒரே தேர்தல்” என்ற தேர்தல் முறை அமல்படுத்தலாம். ஆனால், இந்தியா போன்ற நூறு கோடியை தாண்டிய மக்கள் தொகைக் கொண்ட மிகப்பெரிய நிலப்பரப்பில் பன்முகத்தன்மை கொண்ட மக்களும், அவர்களுக்கு வழிகாட்டும் நெறிமுறைகளை உள்ளடக்கிய, பல்வேறு வேறுபட்ட நெறிமுறைகளைக் கொண்ட அரசியல் இயக்கங்கள் உள்ள இந்திய ஒன்றியத்தில் ஒரே காலகட்டத்தில் தேர்தல் நடத்தினால், நாடாளுமன்றமானாலும், மாநிலங்களில் உள்ள சட்டமன்றங்களானாலும் தனிப் பெரும்பான்மை அல்லது கூட்டணி பெரும்பான்மையின் அடிப்படையிலேயே ஆட்சிகள் அமைக்கப்படும். அரசியல் சட்டப்படி ஆட்சியின் காலக்கெடு ஐந்து ஆண்டுகள் என்றாலும், ஆளும் கட்சிகளின் எண்ணிக்கை பலம் குறைவதற்கும், கட்சிகள் கவிழ்ந்து போவதற்கும் சூழ்நிலைகளும், காரணங்களும் உண்டு என்பதை நாட்டில் முதன்முதல் நடைபெற்ற 1952வது ஆண்டு தேர்தல் தொடங்கி, இதுவரையிலும் நாம் நேரடியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய ஆட்சியோ, மாநிலங்களின் ஆட்சிகளோ எண்ணிக்கை பலத்தை இழந்து கவிழ்ந்து போவது ஆட்சி அமைக்கப்பட்ட சில மாதங்களில் கூட நடக்கலாம், ஆம்! நடந்தும் இருக்கிறது. இப்படி மிகக் குறைந்த காலஇடைவெளியில் கவிழ்ந்து போன மாநில அரசுகளோ, ஒன்றிய அரசோ கவிழ்ந்த நிலையில், அவ்வளவு நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்படுமே, அதுவரையில் இந்திய ஒன்றியமோ, மாநிலங்களோ அரசாங்கமே இல்லாமல் அதிகார வர்க்கங்கள் மூலம் ஆட்சிகளை நிர்வகிக்க முடியுமா என்பது மிகப்பெரிய கேள்விக்குறியாகும். மக்களாட்சி முறையை ஏற்றுக் கொண்ட நிலையில் இடைத்தேர்தல்கள் என்பது தவிர்க்க இயலாது. இந்த உண்மைகள் எல்லாம் ஒன்றிய பி.ஜே.பி. அரசுக்கு விளங்காமல் இல்லை. ஆனாலும், தங்களின் ராஜகுருவான ராஷ்ட்ரிய சுயம்சேவக் சங் (RSSSS) தலையாயக் கொள்கையான “இந்துத்துவாக் கோட்பாட்டின்” அடிப்படையில் இந்துராஷ்டிரத்தை உருவாக்க வேண்டும் என்பதற்கான வழித்தடம்தான் “ஒரே நாடு ஒரே தேர்தல்” என்பதாகும்.

இந்த வழித்தடம் எங்கேபோய் முடியுமென்றால், இந்திய ஒன்றியத்தை நிர்வகிக்க ஜனாதிபதி ஆட்சி முறைதான் சாலச் சிறந்தது என தன்னிச்சையாக முடிவெடுத்து, இந்த முடிவிற்கேற்ப, இந்திய அரசியல் சட்டத்தை வெட்டியும், ஒட்டியும் நிச்சயமாக உருக்குலைப்பார்கள். இது ஒரு ஆபத்தான வழி. இந்திய ஒற்றுமையைச் சீர்குலைக்கும் நாசக்கார ஏற்பாடு என்பதை நாட்டின் நலனில் அக்கறை கொண்ட திராவிட மாடல் ஆட்சியின் தலைவர், இந்திய நாட்டின் எதிர்கால ஒற்றுமைக் குறித்து விடுத்த எச்சரிக்கையை, ஒன்றிய அரசு திசைகாட்டும் சரியான வழித்தடமாக எடுத்துக்கொண்டு, தங்களின் முடிவை மாற்றுவதன் மூலம் இந்திய நாட்டின் ஒற்றுமை காப்பாற்றப்படும் என்பதே இந்திய நாட்டின் ஒற்றுமை மீது அக்கறை கொண்ட மக்களின் ஒருமித்த கோரிக்கையாகும்.



தூத்துக்குடி கலைஞர் அரங்கில் நடைபெற்ற தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டத்தில், பூத் கமிட்டி அமைப்பது உள்ளிட்ட கழக செயல் திட்டங்கள் குறித்து சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன் உரையாற்றினார். உடன் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர் மற்றும் பாளையங்கோட்டை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் வசந்தம் ஏ.சி. ஜெயக்குமார், மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன், செல்வராஜ், கோவில்பட்டி நகரச் செயலாளர் கருணாநிதி, ஒன்றிய செயலாளர்கள் புதூர் ராதா கிருஷ்ணன், பீக்கிளிப்பட்டி முருகேசன், காசி விஸ்வநாதன், நவநீதகண்ணன், கழுகுமலை சுப்பிரமணியன், கருப்பசாமி, மும்மூர்த்தி, சின்னமாரிமுத்து, ராமசுப்பு, அன்புராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.